**உதவி அமர்வு நீதிமன்றம் / சார்பு நீதிமன்றம், துறையூர்.**
**முன்னிலை.திரு.C.விஜய்கார்த்திக்,M.A.,M.L.,**
**உதவி அமர்வு நீதிபதி / சார்பு நீதிபதி,**
**துறையூர்.**

## SC.No.139/2023

2025ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 14ம் நாள் சாட்சியாகிய அ.சா.10 வது நபரின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின் படி திரு.S.கிருஷ்ணன், இருக்கை எழுத்தர் நிலை-2 என்பவரால் ஆணையுறுதி பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுப்ரமணியன் | த/பெ | : | முருகேசன் |
| | | | க/பெ | : | |
| வயது | : | | ஊர் | : | |
| தொழில் | : | | அலைபேசி எண் | : | |
| தேதி | : | 14.08.2025 | முகவரி | : | |

**எதிரி ஆஜர்.**
**சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு முதல்விசாரணை:**

1. நான் தற்போது திருச்சி அரசு மருத்துவகல்லூரி முதுகலை மருத்துவம் படித்து வருகிறேன். நான் கடந்த 04.07.2022 தேதி திருச்சி அட்லஸ் மருத்துவமனையில் பணியில் இருந்த போது ராதிகா என்கின்ற 31 வயதுடைய பெண் காலை 11.00 மணியளவில் அவருக்கு தெரிந்த ஒரு நபரால் அருவாள் மற்றும்கற்களால் தாக்கப்பட்டதாக கூறி 02.15 மணியளவில் சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்டார். நான் அவரை பரிசோதித்தபோது அவருக்கு கீழ்கண்ட காயங்கள் ஏற்பட்டன. 1. வலது கீழ் கால் கிட்டத்தட்ட துண்டாகிவிட்ட நிலையில் இருந்தது. 2. வலது கீழ்காலில் உள்ள நரம்புகள் ரத்த குழாய்கள் மற்றும் இரண்டு எலும்புகளும் துண்டாகி காணப்பட்டன. 3. 5x2x2 cm அளவில் வலது தலைபகுதியில்ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது. 4. 2x2 cm அளவில் வலது கட்டைவிரலில் ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது.

5. 2cm மேல் உதட்டில் வெட்டுக்காயம் காணப்பட்டது. 6. 3x2 cm அளவில் வலது கையில் ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது. அவருக்கு xray பரிசோதனை செய்து பார்த்ததில் வலது காலில் உள்ள இரண்டு எலும்புகளும் உடைந்து காணப்பட்டன. அவருக்கு ஏற்பட்டுள்ள காயம் எண். 1 மற்றும் 2 கொடுங்காயம் என்று சான்றளித்தேன். அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு 20.07.2022 ம் தேதி மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டார். விபத்து பதிவேடு **அ.த.சா.ஆ.7**, காயச்சான்றிதழ் **அ.த.சா.ஆ.8**. போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

<u>**குறுக்கு விசாரணை**</u>

1. காயம் பெற்ற நபர் மருத்துவமனைக்கு வரும்போது சுயநினைவோடு தான் இருந்தார். காயம் பெற்ற நபருக்கு அதிக ரத்தபோக்கு ஏற்பட்டிருக்கும் பட்சத்தில் மயக்கமடைய வாய்ப்பு உள்ளது. இந்த வழக்கில் காயம் பெற்றவருக்கு அதிக ரத்தபோக்கு ஏற்பட வாய்ப்பு உள்ளது. போலீஸாருக்கு நாங்கள் அன்றைய தினமே மதியம் தகவல் கொடுத்தோம். போலீஸார் காயம்பட்டவரிடம் வாக்குமூலம் வாங்கும்போது நான் உடன் இல்லை. போலீஸார் ஆயுதம் காட்டி என்னிடம் விசாரிக்கவில்லை. காயம்பட்டவருக்கு வழக்கமான ரத்தப்பரிசோதனை செய்தோம். போலீஸார் என்னிடம் ரத்தமாதிரி எதுவும் வழங்கவில்லை. சம்பவம் மலைப்பகுதியில் நடைபெற்றுள்ளதால் காயம்பட்டவர் அதிகப்படியான எடையுள்ள விறகுகட்டைகளை எடுத்துவரும்போது நிலை தடுமாறி கீழேவிழும்போது நான் குறிப்பிட்ட 1, 2 காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்பு உள்ளது. காயம்பட்டவர் விறகு கட்டையுடன் கீழே விழுந்ததால் தான் மேற்படி காயங்கள் ஏற்பட்டது எனவும், விபத்து பதிவேட்டில் நான் கூறியுள்ளது போல் அவருக்கு காயம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

/ உண்மை நகல்/

(ஒம்/-C.விஜய்கார்த்திக்)
சார்பு நீதிபதி,
துறையூர்